**இந்திய அரசு**

**சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்**

सत्यमेव जयते

# தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண் – டையூ (ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளை ஒன்றிணைத்தல்) சட்டம், 2019

**(எண் 44/2019)**

**( 2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு )**

# THE DADRA AND NAGAR HAVELI AND DAMAN AND DIU (MERGER OF UNION TERRITORIES) ACT, 2019

**(No. 44 of 2019)**

**(As on 31st October, 2023)**

தமிழாக்கம்:

இந்திய அரசுக்காக

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

சென்னை

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

2023

# தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண் –டையூ (ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளை ஒன்றிணைத்தல்) சட்டம், 2019

(எண் 44/2019)

# THE DADRA AND NAGAR HAVELI AND DAMAN AND DIU (MERGER OF UNION TERRITORIES) ACT, 2019

**(No. 44 of 2019)**

# PREFACE

This edition of the Dadra and Nagar Haveli and Daman and Diu (Merger of Union Territories) Act, 2019 (No. 44 of 2019) as on 31st October, 2023, containing the Authoritative Texts of that Act in Tamil and the same was published in the Gazette of the India, Extraordinary, Part XV, Section 1, Vol. I, dated 12th May, 2023 on Pages from 159 to 170.

The Authoritative Texts in Tamil was published under the authority of the President under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it become the authoritative texts of the Act in Tamil.

New Delhi, *(Signed)……*
12th May, 2023. *Secretary to Government of India.*

# முன்னுரை

2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறுள்ள தாத்ரா நாகர் ஹவேலி மற்றும் தமண் – டையூ (ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளை ஒன்றிணைத்தல்) சட்டம், 2019 (எண் 44/2019) இன் இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது, இது 2023, மே 12 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பகுதி XV, பிரிவு 1, தொகுதி I இன் 159 முதல் 170 வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய தமிழ் மொழிபெயர்ப்பு, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 இன் (50/1973) பிரிவு 2 இன் கூறு (அ) வின்படி குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது, அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.

புது தில்லி, (ஒப்பம்)……
12, மே 2023. இந்திய அரசு செயலாளர்.

# THE DADRA AND NAGAR HAVELI AND DAMAN AND DIU (MERGER OF UNION TERRITORIES) ACT, 2019

**(No. 44 of 2019)**

CONTENTS

**Sections** **Pages**

PART I

PRELIMINARY

1. Short title and commencement. 1
2. Definitions. 1

PART II

MERGER OF UNION TERRITORIES

3. Formation of Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu. 2
4. Amendment of article 240 of Constitution. 2
5. Amendment of First Schedule to Constitution. 2

PART III

REPRESENTATION IN THE HOUSE OF THE PEOPLE

6. Allocation of seats in House of People. 3
7. Provisions as to sitting members. 3

PART IV

HIGH COURT

8. Extension of jurisdiction of High Court of Bombay. 3

# தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண் – டையூ (ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளை ஒன்றிணைத்தல்) சட்டம், 2019

**(எண் 44/2019)**

**பொருளடக்கம்**

**பிரிவுகள்** **பக்கங்கள்**

**பகுதி I**

**முன்னுரை**

| | | |
|---|---|---|
| 1. | குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம். | 1 |
| 2. | பொருள் வரையறைகள். | 1 |

**பகுதி II**

**ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளை ஒன்றிணைத்தல்**

| | | |
|---|---|---|
| 3. | தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்து ஆட்சிநிலவரையை உருவாக்குதல். | 2 |
| 4. | அரசமைப்பின் 240 ஆம் உறுப்பிற்கான திருத்தம். | 2 |
| 5. | அரசமைப்பின் முதலாம் இணைப்புப்பட்டியலுக்கான திருத்தம். | 2 |

**பகுதி III**

**மக்களவையில் சார்பாற்றம்**

| | | |
|---|---|---|
| 6. | மக்களவையில் பதவியிடங்களைப் பகிர்ந்தொதுக்குதல். | 3 |
| 7. | பதவியிலிருக்கும் உறுப்பினர்கள் குறித்த வகையங்கள். | 3 |

**பகுதி IV**

**உயர் நீதிமன்றம்**

| | | |
|---|---|---|
| 8. | பம்பாய் உயர் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பை நீட்டித்தல். | 3 |

## PART V

## ASSETS AND LIABILITIES


9. Land and goods. 4

10. Cash balances. 4

11. Arrears of tax. 4

12. Right to recover loans and advances. 5

13. Assets and liabilities of Union territory undertakings. 5

14. Refund of taxes collected in excess. 5


## PART VI

## PROVISIONS AS TO SERVICES


15. Provisions relating to All India Services. 5

16. Provisions relating to other services. 5


## PART VII

## LEGAL AND MISCELLANEOUS PROVISIONS


17. Extension of laws. 8

18. Power to construe laws. 8

19. Power to adapt laws. 8

20. Legal proceedings. 9

21. Transfer of pending proceeding. 9

22. Effect of provisions inconsistent with other laws. 10

23. Power to remove difficulties. 10

## பகுதி V

## சொத்திருப்புகளும் பொறுப்படைவுகளும்


9. நிலமும் சரக்குகளும். 4

10. பண இருப்புகள். 4

11. வரி நிலுவைகள். 4

12. பெறுகடன்களையும் முன்பணங்களையும் வசூலிக்கும் உரிமை. 5

13. ஒன்றியத்து ஆட்சிநிலவரை ஏற்பமைவுகளின் சொத்திருப்புகளும் பொறுப்படைவுகளும். 5

14. மிகையாக ஈட்டப்பட்ட வரிகளைத் திருப்பிக் கொடுத்தல். 5


## பகுதி VI

## பணியங்கள் குறித்த வகையங்கள்


15. அனைத்திந்தியப் பணியங்கள் தொடர்பான வகையங்கள். 5

16. பிற பணியங்கள் தொடர்பான வகையங்கள். 5


## பகுதி VII

## சட்ட மற்றும் பல்வகை வகையங்கள்


17. சட்டங்களின் நீட்டிப்பு. 8

18. சட்டங்களைப் பொருள் கொள்வதற்கான அதிகாரம். 8

19. சட்டங்களைத் தழுவமைவு செய்வதற்கான அதிகாரம். 8

20. சட்ட நடவடிக்கைகள். 9

21. முடிவுறா நிலையிலுள்ள நடவடிக்கையை மாற்றுகை செய்தல். 9

22. பிற சட்டங்களுடன் முரண்படும் வகையங்களின் செல்திறம். 10

23. இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம். 10

# THE DADRA AND NAGAR HAVELI AND DAMAN AND DIU (MERGER OF UNION TERRITORIES) ACT, 2019

**(No. 44 of 2019)**

[09th *December*, 2019.]

An Act to provide for merger of Union territories of Dadra and Nagar Haveli and Daman and Diu and for matters connected therewith.

BE it enacted by Parliament in the Seventieth Year of the Republic of India as follows:—

## CHAPTER I

## PRELIMINARY

Short title and commencement.

1. (1) This Act may be called the Dadra and Nagar Haveli and Daman and Diu (Merger of Union territories) Act, 2019.

(2) It shall come into force on such date[1] as the Central Government may, by notification in the Official Gazette, appoint.

Definitions.

2. In this Act, unless the context otherwise requires, —

(*a*) "appointed day[2]" means the day on which the Central Government may, by notification in the Official Gazette, appoint;

(b) "existing Union territories" means the Union territories of Dadra and Nagar Haveli and Daman and Diu as existing immediately before the appointed day;

(c) "law" includes any enactment, Ordinance, regulation, order, bye-law, rule, scheme, notification or other instrument having a force of law in the whole or in any part of the existing Union territories immediately before the appointed day.

---

1. 26th January, 2020, *vide* notification No. S.O. 4542(E), dated 19th December, 2019, *see* Gazette of India, Extraordinary, Part II, sec. 3(*ii*).

2. 26th January, 2020, *vide* notification No. S.O. 4543(E), dated 19th December, 2019, *see* Gazette of India, Extraordinary, Part II, sec. 3(*ii*).

# தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண் டையூ (ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளை ஒன்றிணைத்தல்) சட்டம், 2019

**(எண் 44/2019)**

[2019, டிசம்பர் 9]

தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஆகிய ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளை ஒன்றிணைப்பதற்கும் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்பாடுகளுக்கும் வகைசெய்வதற்குமானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் எழுபதாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

## அத்தியாயம் I

## முன்னுரை

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ (ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளை ஒன்றிணைத்தல்) சட்டம், 2019 என்று வழங்கப்பெறும்.

(2) இது, மைய அரசு அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று[1] செல்லாற்றல் பெறும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,–

(அ) "குறித்திட்ட நாள்[2]" என்பது, மைய அரசு அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடும் நாள்என்று பொருள்படும்;

(ஆ) "நிலவுறும் ஒன்றியத்து ஆட்சிநிலவரைகள்" என்பது, குறித்திட்ட நாளுக்கு உடன் முன்பு, நிலவுறும் தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஆகிய ஒன்றியத்து ஆட்சிநிலவரைகள் என்று பொருள்படும்;

(இ) "சட்டம்" என்பது, குறித்திட்ட நாளுக்கு உடன் முன்பு நிலவுறும் ஒன்றியத்து ஆட்சிநிலவரைகள் முழுவதுமாகவோ பகுதியாகவோ செல்லாற்றல் கொண்டிருக்கும் செய்சட்டம், அவசரச்சட்டம், ஒழுங்குறுத்தும்விதி, ஆணை, துணை–விதி, விதி, செயல்திட்டம், அறிவிக்கை அல்லது பிற முறையாவணம் எதனையும் உள்ளடக்கும்.

---

1. 2020, சனவரி 26, 2019, டிசம்பர் 19 ஆம் தேதியிட்ட அறிவிக்கை எண். எஸ். ஓ. 4542 (E) ஐ காண்க, இந்திய அரசிதழ், சிறப்பிதழ், பகுதி II, பிரிவு 3 (ii) ஐ பார்க்க.
2. 2020, சனவரி 26, 2019, டிசம்பர் 19 ஆம் தேதியிட்ட அறிவிக்கை எண். எஸ். ஓ. 4543 (E) ஐ காண்க, இந்திய அரசிதழ், சிறப்பிதழ், பகுதி II, பிரிவு 3 (ii) ஐ பார்க்க.

## PART II

## MERGER OF UNION TERRITORIES

Formation of Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu.

3. On and from the appointed day, there shall be formed a new Union territory to be known as the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu comprising the territory of the existing Union territories, namely:—

Dadra and Nagar Haveli and Daman and Diu,

and thereupon the said territories shall have ceased to form part of the existing Union territories.

Amendment of article 240 of Constitution.

4. In article 240 of the Constitution, in clause (*1*),—

(*i*) for entry (*c*), the following entry shall be substituted, namely:—

"(c) Dadra and Nagar Haveli and Daman and Diu;";

(*ii*) entry (*d*) shall be omitted.

Amendment of First Schedule to Constitution.

5. On and from the appointed day, in the First Schedule to the Constitution, under the heading "II. THE UNION TERRITORIES", for entries 4 and 5 and the corresponding entries relating thereto, the following shall be substituted, namely:—

| Name | Extent |
|---|---|
| "4. Dadra and Nagar Haveli and Daman and Diu | The territory which immediately before the eleventh day of August, 1961 was comprised in Free Dadra and Nagar Haveli and the territories specified in section 4 of the Goa, Daman and Diu Reorganisation Act, 1987. |

18 /1987.

## பகுதி II

## ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளை ஒன்றிணைத்தல்

தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்து ஆட்சிநிலவ–ரையை உருவாக்குதல்.

3. குறித்திட்ட நாளன்றும் அது முதற்கொண்டும், நிலவுறும் ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளான தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஆட்சிநிலவரையை உள்ளடக்கிய,

தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்– டையூ

ஒன்றியத்து ஆட்சிநிலவரை எனப்படும் ஒரு புதிய ஒன்றியத்து ஆட்சிநிலவரை உருவாக்கப்பட்டு இருந்துவரும்; மேலும் அதன் விளைவாக மேற்சொன்ன ஆட்சிநிலவரைகள், நிலவுறும் ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளின் பகுதியாகச் சேர்வது அற்றுப்போதல் வேண்டும்.

அரசமைப்பின் 240 ஆம் உறுப்பிற்கான திருத்தம்.

4. அரசமைப்பின் 240 ஆம் உறுப்பில் (1) ஆம் கூறில்,

(i). (இ) பதிவுக்கு, பின்வரும் பதிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(இ) தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ;"

(ii). (ஈ) பதிவு விட்டுவிடப்படுதல் வேண்டும்.

அரசமைப்பின் முதலாம் இணைப்புப்–பட்டியலுக்கான திருத்தம்.

5. குறித் ட நாளன்றும் அது முதற்கொண்டும், அரசமைப்பின் முதலாம் இணைப்புப்பட்டியலில், "**II. ஒன்றியத்து ஆட்சிநிலவரைகள்**", என்ற தலைப்பின் கீழ், 4 ஆம் மற்றும் 5 ஆம் பதிவுகளுக்கும் மற்றும் அவற்றிற்குத் தொடர்புடைய நேரிணையான பதிவுகளுக்கும், பின்வருவன மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்

| பெயர் | அளாவுகை |
|---|---|
| "4. தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண் – டையூ | 1961, ஆகஸ்டு பதினோராம் நாளுக்கு உடன் முன்பு தன்னுரிமையுடைய தாத்ரா–நாகர் ஹவேலியில் உள்ளடங்கியிருந்த ஆட்சி–நிலவரையும், கோவா, தமண்–டையூ மறுஅமைப்புச் சட்டம், 1987 இன் 4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆட்சிநிலவரைகளும்.". |

18 /1987.

## PART III

## REPRESENTATION IN THE HOUSE OF THE PEOPLE

Allocation of seats in House of People.

6. On and from the appointed day, there shall be allocated two seats to the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu in the House of the People and the First Schedule to the Representation of the People Act, 1950 shall be deemed to be amended accordingly. 43 /1950.

Provisions as to sitting members.

7. (1) Every sitting members of the House of the People representing any Parliamentary constituency, which, on the appointed day, by virtue of the provisions of section 5, stands allotted, with or without alteration of boundaries, be deemed to have been elected to that House by that constituency.

***Explanation***.—For the purposes of this sub-section "parliamentary constituency" shall have the same meaning as assigned to it in the Representation of the People Act, 1950 43 /1950.

(2) The term of office of such members shall remain unaltered.

## PART IV

## HIGH COURT

Extension of jurisdiction of High Court of Bombay.

8. On and from the appointed day, the jurisdiction of the High Court of Bombay shall continue to extend to the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu.

## பகுதி III

## மக்களவையில் சார்பாற்றம்

6. குறித் ட நாளன்றும் அது முதற்கொண்டும், மக்களவையில் தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்து ஆட்சிநிலவரைக்கு இரண்டு பதவியிடங்கள் பகிர்ந்தொதுக்கப்படுதல் வேண்டும்; மேலும் மக்கள் சார்பாற்றச் சட்டம், 1950 இன் முதலாம் இணைப்புப்பட்டியல் அவ்வாறே திருத்தம் செய்யப்படுவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். மக்களவையில் பதவியிடங்களைப் பகிர்ந்தொதுக்குதல்.

43 /1950.

7. (1). 5 ஆம் பிரிவின் வகையங்களின் பயன்திறன் வழி, குறித்திட்ட நாளன்று நாடாளுமன்றத் தேர்தல்தொகுதி எதனையும் சார்பாற்றம் செய்கிற பதவியிலிருக்கும் மக்களவை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும், எல்லைகளை மாற்றம் செய்தோ செய்யாமலோ பகிர்ந்தொதுக்கப்பட்டு இருக்கின்ற அந்தத் தேர்தல் தொகுதியால் அந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருப்பவராகக் கொள்ளப்படுதல் வேண்டும். பதவியிலிருக்கும் உறுப்பினர்கள் குறித்த வகையங்கள்.

**விளக்கம்.–** இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்காக, "நாடாளுமன்றத் தேர்தல்தொகுதி" என்பது, மக்கள் சார்பாற்றச் சட்டம், 1950 இல் அதற்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள அதே பொருளை உடையது ஆகும்.

43/1950.

(2) அத்தகைய உறுப்பினர்களின் பதவிக்காலம் மற்றும் செய்யப்படாமல் இருந்து வருதல் வேண்டும்.

## பகுதி IV

## உயர் நீதிமன்றம்

8. குறித்திட்ட நாளன்றும் அது முதற்கொண்டும், பம்பாய் உயர் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்து ஆட்சிநிலவரைக்குத் தொடர்ந்து அளாவி இருத்தல் வேண்டும். பம்பாய் உயர் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பை நீட்டித்தல்.

## PART V

## ASSETS AND LIABILITIES

Land and goods.

9.Subject to the other provisions of this Part, all land and all stores, articles and other goods held immediately before the appointed day, by the existing Union territories, shall, on and from that day, vest in the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu.

***Explanation*.**—For the purposes of this section, the expression "land" includes immovable property of every kind and any rights in or over such property and the expression "goods" does not include coins, bank notes and currency notes.

Cash balances.

10. The total of the cash balances in all treasuries, the Reserve Bank of India, the State Bank of India and any nationalised bank, of the existing Union territories immediately before the appointed day shall be merged in the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu.

Arrears of tax.

11. (1) The right to recover arrears of any tax or duty (including arrears of land revenue) on any property situated in the existing Union territories shall vest in the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu.

(2) The right to recover arrears of any tax or duty, other than a tax or duty specified in sub-section (*1*), shall belong to the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu.

## பகுதி V

## சொத்திருப்புகளும் பொறுப்படைவுகளும்

9. இந்தப் பகுதியின் பிற வகையங்களுக்கு உட்பட்டு, குறித்திட்ட நாளுக்கு உடன் முன்பு, நிலவுறும் ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளால் வைத்து ஆளப்பட்டு வரும் அனைத்து நிலமும், அனைத்து வழங்கீட்டுப் பொருட்சேகரமும், உருப்பொருட்களும் மற்றும் பிற சரக்குகளும் அந்த நாளன்றும் அது முதற்கொண்டும் தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்து ஆட்சிநிலவரையில் உற்றமைதல் வேண்டும். நிலமும் சரக்குகளும்.

**விளக்கம்**.– இந்தப் பிரிவின் நோக்கங்களுக்கு, "நிலம்" என்ற சொல், அசையாச் சொத்தின் ஒவ்வொரு வகையினையும் மற்றும் அத்தகைய சொத்திலோ அல்லது அதன் மீதோ உள்ள உரிமைகள் எவற்றையும் உள்ளடக்கும்; மற்றும் "சரக்குகள்" என்ற சொல் நாணயங்கள், வங்கித்தாள்கள் மற்றும் பணச்செலாவணி ஆகியவற்றை உள்ளடக்குவதில்லை.

10. குறித்திட்ட நாளுக்கு உடன் முன்பு, அனைத்துக் கருவூலங்களிலும், இந்திய சேம வங்கியிலும், பாரத ஸ்டேட் வங்கியிலும் மற்றும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கி எதிலும் உள்ள நிலவுறும் ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளின் மொத்த பண இருப்புகளும் தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்து ஆட்சிநிலவரையுடன் ஒன்றிணைத்தல் வேண்டும். பண இருப்புகள்.

11. (1) நிலவுறும் ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளில் அமைந்துள்ள சொத்து எதன் மீதுமான (நிலவருவாய் நிலுவைகள் உள்ளடங்கலான) வரி அல்லது தீர்வை எதனின் நிலுவைகளை வசூலிக்கும் உரிமையானது, தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்து ஆட்சிநிலவரையில் உற்றமைதல் வேண்டும். வரி நிலுவைகள்.

(2). (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஒரு வரி அல்லது தீர்வை அல்லாத பிற வரி அல்லது தீர்வை எதனின் நிலுவைகளையும் வசூலிக்கும் உரிமை, தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்து ஆட்சிநிலவரையைச் சார்ந்ததாகும்.

Right to recover loans and advances.

12. The right to recover any loans or advances made by the existing Union territories before the appointed day to any local body, society, agriculturist or other person shall belong to the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu.

Assets and liabilities of Union territory undertakings.

13. The assets and liabilities relating to any commercial undertaking of the existing Union territories shall vest in the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu.

Refund of taxes collected in excess.

14. The liability of the Union territory to refund—

(*a*) any tax or duty on property, including land revenue collected in excess shall go to the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu;

(b) any other tax or duty collected in excess shall go to the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu.

## PART VI

## PROVISIONS AS TO SERVICES

Provisions relating to All India Services.

15. The members of each of the All India Services borne on the existing Union territories cadre immediately before the appointed day shall continue to be in the cadre of the same service of the existing Union territory in which they stand allocated before the appointed day.

Provisions relating to other services.

16. (1) Every person employed in connection with the affairs of the existing Union territories and serving immediately before the appointed day in the existing Union territories shall, on and from that day, —

12. குறித்திட்ட நாளுக்கு முன்பு, நிலவுறும் ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளால் உள்ளாட்சிக் குழுமம், சங்கம், உழவர் அல்லது பிற நபர் எவருக்கும் கொடுக்கப்பட்ட பெறுகடன்கள் அல்லது முன்பணங்கள் எவற்றையும் வசூலிக்கும் உரிமையானது, தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்து ஆட்சிநிலவரையைச் சார்ந்ததாகும்.

பெறுகடன்–களையும் முன்பணங்–களையும் வசூலிக்கும் உரிமை.

13. நிலவுறும் ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளின் வாணிபம் சார்ந்த ஏற்பமைவு எதற்கும் தொடர்புடைய சொத்திருப்புகளும் பொறுப்படைவுகளும் தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்துஆட்சிநிலவரையில் உற்றமைதல் வேண்டும்.

ஒன்றியத்து ஆட்சிநிலவரை ஏற்பமைவு–களின் சொத்திருப்பு–களும் பொறுப்படைவு–களும்.

14. திருப்பிக் கொடுப்பதற்கான ஒன்றியத்தின் பொறுப்படைவானது –

மிகையாக ஈட்டப்பட்ட வரிகளைத் திருப்பிக் கொடுத்தல்.

(அ) மிகையாக ஈட்டப்பட்ட நில வருவாய் எதனையும் உள்ளடக்கிய சொத்தின் மீதான வரி அல்லது தீர்வை தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்து ஆட்சி நிலவரைக்குப் போதல் வேண்டும் ;

(ஆ) மிகையாக ஈட்டப்பட்ட பிற வரி அல்லது தீர்வை எதுவும் தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்து ஆட்சி நிலவரைக்குப் போதல் வேண்டும்.

## பகுதி VI

## பணியங்கள் குறித்த வகையங்கள்

15. குறித்திட்ட நாளுக்கு உடன் முன்பு, நிலவுறும் ஒன்றியத்து ஆட்சிநிலவரைகள் சார்ந்துள்ள அனைத்திந்தியப் பணியங்களில் ஒவ்வொரு பணிநிலைப் பிரிவின் உறுப்பினர்கள், குறித்திட்ட நாளுக்கு முன்பு, அவர்கள் நிலவுறும் ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் எந்தப் பணியத்திற்குப் பகிர்ந்தொதுக்கப்பட்டு இருக்கின்றனரோ அதே பணியத்தில் தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும்.

அனைத்திந்தியப் பணியங்கள் தொடர்பான வகையங்கள்.

16. (1) நிலவுறும் ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளின் அலுவற்பாடுகள் தொடர்பாகப் பணியமர்த்தம் பெற்று, நிலவுறும் ஒன்றியத்து ஆட்சிநிலவரையில் குறித்திட்ட நாளுக்கு உடன் முன்பு பணிபுரிகிற ஒவ்வொரு நபரும் அந்த நாளன்றும் அது முதற்கொண்டும்,–

பிற பணியங்கள் தொடர்பான வகையங்கள்.

(*a*) continue to serve in connection with the affairs of the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu; and

(*b*) be deemed to be provisionally allotted to serve in connection with the affairs of the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu:

Provided that nothing in clause (b) shall apply to a person to whom the provisions of section 15 apply or to a person on deputation from any State.

(2) As soon as may be, after the appointed day, the Central Government shall by general or special order, determine whether every person referred to in clause (*b*) of sub-section (*1*) shall be finally allotted for service in the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu and the date with effect from which such allotment shall take effect or be deemed to have taken effect.

(3) As soon as may be after the Central Government passes orders finally allotting an employee in terms of sub-section (2), the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu shall take steps to integrate the employee into the services under its control in accordance with such special or general orders or instructions as may be issued by the Central Government from time to time in this behalf.

(4) The Central Government may, by order establish one or more Advisory Committees for the purpose of assisting it in regard to ensuring of fair and equitable treatment to all persons affected by the provisions of this section and proper consideration of any representations made by such persons:

(அ) தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் அலுவற்பாடுகள் தொடர்பாகத் தொடர்ந்து பணிபுரிதல் வேண்டும்; மற்றும்

(ஆ) தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் அலுவற்பாடுகள் தொடர்பாகப் பணிபுரிவதற்குத் தற்போதைக்குப் பகிர்ந்தொதுக்கப்பட்டவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்:

**வரம்புரையாக:** (ஆ) கூறில் உள்ள எதுவும் 15 ஆம் பிரிவின் வகையங்கள் எந்த நபருக்குப் பொருந்துமோ அந்த நபருக்கு அல்லது பிற மாநிலம் எதிலிருந்து மாற்றுப்பணியில் அனுப்பப்படும் நபருக்கு பொருந்தாது.

(2) குறித்திட்ட நாளுக்குப் பின்பு, மைய அரசு, கூடிய விரைவில் பொதுவான அல்லது தனி ஆணையின் வழி, (1) ஆம் உட்பிரிவின் (ஆ) கூறில் சுட்டப்பட்டுள்ள ஒவ்வொரு நபரும் தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் பணியத்திற்கு இறுதியாகப் பகிர்ந்தொதுக்கப்படுதல் வேண்டுமா என்பதையும் மற்றும் அத்தகைய பகிர்ந்தொதுக்கம் எந்தத் தேதியிலிருந்து செல்திறம் பெற வேண்டுமோ அல்லது செல்திறம் பெற்றிருப்பதாகக் கொள்ளப்பட வேண்டுமோ அந்தத் தேதியையும் தீர்மானித்தல் வேண்டும்.

(3). (2) ஆம் உட்பிரிவின் வரையுரைகளில் பணியாளர் ஒருவரை இறுதியாகப் பகிர்ந்தொதுக்கி மைய அரசு ஆணைகள் பிறப்பித்த பின்பு, கூடிய விரைவில், தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்து ஆட்சிநிலவரை, அவ்வப்போது மைய அரசால் அதற்கென பிறப்பிக்கலாகும் அத்தகைய தனி அல்லது பொதுவான ஆணைகள் அல்லது நெறிவுறுத்தங்களின்படி அதன் கட்டாள்கையின் கீழ் உள்ள பணியங்களில் பணியாளர்களை ஒருங்கிணைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

(4) மைய அரசு, ஆணையின் வழி, இந்தப் பிரிவின் வகையங்களால் பாதிக்கப்பட்ட அனைத்து நபர்களையும், சீரியமுறையிலும் நேரியமுறையிலும் நடத்தப்படுவதையும், அத்தகைய நபர்களால் செய்யப்படும் உரையீடு எவையும் முறையாகக் கருத்தில் கொள்ளப்படுவதையும் உறுதி செய்வது பொறுத்து அதற்கு உதவும் நோக்கத்திற்காக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அறிவுரைக் குழுக்களை நிறுவலாம்:

Provided that notwithstanding anything to the contrary contained in any law for the time being in force, no representation shall be against any order passed by the competent authority on matters arising out of the division and integration of services under this Act, on the expiry of three months from the date of publication or service of such order, whichever is earlier:

Provided further that, notwithstanding anything contained in the preceding proviso, the Central Government may *suo motu* or otherwise and for reasons to be recorded, reopen any matter and pass such order thereon, as may appear to it to be appropriate if it is satisfied that it is necessary so to do, in order to prevent any miscarriage of justice to any affected employee.

(5) Nothing in this section shall be deemed to affect, on or after the appointed day, the operation of the provisions of Chapter I of Part XIV of the Constitution in relation to the determination of the conditions of service of persons serving in connection with the affairs of the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu:

Provided that the conditions of service applicable immediately before the appointed day to the case of any person referred to in sub-section (*1*) or sub-section (*2*) shall not be varied to his disadvantage except with the previous approval of the Central Government.

(6) All services prior to the appointed day rendered by a person allotted under sub-section (*2*) in connection with the affairs of the existing Union territories shall, for the purposes of the rules regarding his conditions of service, be deemed to have been rendered in connection with the affairs of the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu.

**வரம்புரையாக:** அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதிலும் முரணாக அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின்படி பணியங்களைப் பிரிப்பதிலோ ஒருங்கிணைப்பதிலோ இருந்து எழும் பொருட்பாடுகள் மீது, தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பினால் பிறப்பிக்கப்பட்ட ஆணை எதற்கும் எதிராக, உரையீடு எதுவும், அத்தகைய ஆணை வெளியான அல்லது அதனைச் சார்வு செய்த தேதி இவற்றுள் எது முந்தியதோ அதிலிருந்து மூன்று மாதம் கழிவுறுவதன் பேரில் செய்தல் ஆகாது:

**மேலும் வரம்புரையாக**: முந்தைய வரம்புரையில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மைய அரசு, தானே முற்பட்டோ பிறவாறாகவோ மற்றும் பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்காக, பாதிக்கப்பட்ட பணியாளர் எவருக்கும் ஏற்படும் நீதிநெறிச் சிதைவு எதனையும் தடுக்கும் பொருட்டு, அவ்வாறு செய்வது தேவையென அது தெளிவுறக்காணுமாயின் எந்தவொரு பொருட்பாட்டிலும் மீண்டும் நடவடிக்கையைத் தொடங்கி அதன்மீது அதற்குப் பொருத்தமெனத் தோன்றும் அத்தகைய ஆணையைப் பிறப்பிக்கலாம்.

(5) இந்தப் பிரிவிலுள்ள எதுவும், குறித்திட்ட நாளன்றோ அதற்குப் பின்போ, தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் அலுவற்பாடுகள் தொடர்பாகப் பணிபுரியும் நபர்களின் பணி வரைக்கட்டுகளைத் தீர்மானிப்பது பொறுத்து அரசமைப்பின் பகுதி XIV இன் அத்தியாயம் I இன் வகையங்கள் செயல்படுவதைப் பாதிப்பதாகக் கொள்ளப்படுதல் ஆகாது:

**வரம்புரையாக:** குறித்திட்ட நாளுக்கு உடன் முன்பு பொருந்தத்தக்க பணி வரைக்கட்டுகள் (1) ஆம் உட்பிரிவிலோ அல்லது (2) ஆம் உட்பிரிவிலோ சுட்டப்பட்டுள்ள எந்தவொரு நபரின் நேர்விலும் மைய அரசின் முன் ஒப்பேற்புடனன்றி அவருக்குப் பாதகமான வகையில் மாறுதல் செய்யப்படுதல் ஆகாது.

(6) குறித்திட்ட நாளுக்கு முன்னர் நிலவுறும் ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் அலுவற்பாடுகள் தொடர்பாக (2) ஆம் உட்பிரிவின்படி பகிர்ந்தொதுக்கப்பட்ட ஒருவரால் புரியப்பட்ட அனைத்துப் பணியங்களும், அவருடைய பணி வரைக்கட்டுகள் பற்றிய விதிகளின் நோக்கங்களுக்காக, தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் அலுவற்பாடுகள் தொடர்பாகப் புரியப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(7) The provisions of this section other than clause (*a*) of sub-section (*1*) shall not apply in relation to any person to whom the provisions of section 15 apply.

## PART VII

## LEGAL AND MISCELLANEOUS PROVISIONS

Extension of laws.

17. All laws which immediately before the appointed day extend to, or are in force in, existing Union territories shall, on and from the appointed day, continue to be in force in those areas in respect of which they were in force immediately before that day.

Power to construe laws.

18. Any court, tribunal or authority required or empowered to enforce any law extended to the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu by section 17 may, for the purpose of facilitating its application in relation to the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu, construe the law in such manner, without affecting the substance, as may be necessary or proper in regard to the matter before the court, tribunal or authority.

Power to adapt laws.

19. For the purpose of facilitating the application of any law in relation to the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu, the Central Government may, before the expiration of two years from the appointed day, by order, make such adaptations and modifications of the law, whether by way of repeal or amendment, as may be necessary or expedient, and thereupon every such law shall have effect subject to the adaptations and modifications so made until altered, repealed or amended by a competent Legislature or other competent authority.

(7). (1) ஆம் உட்பிரிவின் (அ) கூறு அல்லாத இந்தப் பிரிவின் வகையங்கள் எந்த நபருக்கு 15 ஆம் பிரிவின் வகையங்கள் பொருந்தாதோ அந்த நபர் எவர் பொறுத்தும் பொருந்துதல் ஆகாது.

## பகுதி VII

## சட்ட மற்றும் பல்வகை வகையங்கள்

சட்டங்களின் நீட்டிப்பு.

17. குறித்திட்ட நாளுக்கு உடன் முன்பு நிலவுறும் ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளை அளாவிநின்ற அல்லது அதில் செல்லாற்றலிலுள்ள அனைத்துச் சட்டங்களும், குறித்திட்ட நாளன்றும் அது முதற்கொண்டும், அந்த நாளுக்கு உடன் முன்பு, அவை செல்லாற்றலில் இருந்த அந்தப் பகுதிகளைப் பொறுத்து, தொடர்ந்து செல்லாற்றலில் இருந்து வருதல் வேண்டும்.

சட்டங்களைப் பொருள் கொள்வதற்கான அதிகாரம்.

18. 17 ஆம் பிரிவினால் தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்து ஆட்சிநிலவரையை அளாவிநின்ற சட்டம் எதனையும் செயலுறுத்த வேண்டுறுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது அதிகாரஅமைப்பு எதுவும் தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்து ஆட்சிநிலவரை பொறுத்து, அதைப் பொருந்தச் செய்வதற்கு வழிவகுக்கும் நோக்கத்திற்காக அந்த நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது அதிகாரஅமைப்பின் முன்புள்ள பொருட்பாடு பொறுத்துத் தேவையாக அல்லது பொருத்தமாக இருக்கிறவாறு பொருட்கூறு பாதிக்காமல், அத்தகைய முறையில் சட்டத்தைப் பொருள்கொள்ளலாம்.

சட்டங்களைத் தழுவமைவு செய்வதற்கான அதிகாரம்.

19. தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்து ஆட்சிநிலவரை பொறுத்து எந்தவொரு சட்டத்தையும் பொருந்தச் செய்வதற்கு வழிவகுக்கும் நோக்கத்திற்காக, மைய அரசு, குறித்திட்ட நாளிலிருந்து ஈராண்டு கழிவுறுவதற்கு முன்பு, ஆணையின் வழி, தேவையாக அல்லது உகந்ததாக இருக்கலாகிறவாறு நீக்கறவு அல்லது திருத்தம் செய்வதன் மூலமாக, அத்தகைய சட்டத் தழுவமைவுகளையும் மாற்றமைவுகளையும் செய்யலாம்; மற்றும் அதன்பேரில் அத்தகைய சட்டம் ஒவ்வொன்றும் அவ்வாறு செய்யப்பட்ட தழுவமைவுகளுக்கும் மாற்றமைவுகளுக்கும் உட்பட்டுத் தகுதிறமுள்ள சட்டமன்றம் ஒன்றினால் அல்லது பிற தகுதிறம் வாய்ந்த அதிகாரஅமைப்பினால் மாற்றமோ நீக்கறவோ அல்லது திருத்தமோ செய்யப்படும் வரையில் செல்திறம் பெறும்.

Legal proceedings.

20. Where, immediately before the appointed day, the existing Union territories is a party to any legal proceedings with respect to any property, rights or liabilities transferred to the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu under this Act, the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu shall be deemed to be substituted for the existing Union territories as a party to those proceedings, or added as a party thereto, as the case may be, and the proceedings may continue accordingly.

Transfer of pending proceeding.

21. (1) Every proceeding pending immediately before the appointed day before any court (other than a High Court), tribunal, authority or officer in any area which on that day falls within the existing Union territories shall, stand transferred to the corresponding court, tribunal, authority or officer in the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu.

(2) In this section,-

(*a*) "proceeding" includes any suit, case or appeal; and

(*b*) "corresponding court, tribunal, authority or officer", in the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu, means—

(*i*) the court, tribunal, authority or officer in which, or before whom, the proceeding would have laid if the proceeding had been instituted after the appointed day, or

20. குறித்திட்ட நாளுக்கு உடன் முன்பு, இந்தச் சட்டத்தின்படி தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்து ஆட்சிநிலவரைக்கு மாற்றப்பட்ட சொத்து, உரிமைகள் அல்லது பொறுப்படைவுகள் எவற்றையும் பொறுத்த சட்ட நடவடிக்கைகள் எதற்கும் நிலவுறும் ஒன்றியத்து ஆட்சிநிலவரைகள் ஒரு தரப்பினராக இருக்கிறவிடத்து, நிலவுறும் ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளுக்கு தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்து ஆட்சிநிலவரை, நேர்வுக்கேற்ப, அந்த நடவடிக்கைகளின் ஒரு தரப்பினருக்கு மாற்றாக அமைக்கப்படுவதாக அல்லது அதன் ஒரு தரப்பினராகச் சேர்க்கப்படுவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அவ்வாறே நடவடிக்கைகள் தொடர்ந்து நடக்கலாம்.

சட்ட நடவடிக்கைகள்.

21. (1) குறித்திட்ட நாளுக்கு உடன் முன்பு, அந்த நாளன்று நிலவுறும் ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளுக்குள் வரும் பகுதி எதிலும் உள்ள (ஓர் உயர் நீதிமன்றம் அல்லாத பிற) நீதிமன்றம், தீர்ப்பாயம், அதிகாரஅமைப்பு எதன்முன்பும் அல்லது அலுவலர் எவர் முன்பும் முடிவுறாநிலையிலுள்ள நடவடிக்கை ஒவ்வொன்றும், தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்து ஆட்சிநிலவரையில் உள்ள நேரிணையான நீதிமன்றம், தீர்ப்பாயம், அதிகாரஅமைப்பு அல்லது அலுவலருக்கு மாற்றுகை செய்யப்பட்டு இருத்தல் வேண்டும்.

முடிவுறா நிலையிலுள்ள நடவடிக்கையை மாற்றுகை செய்தல்.

(2) இந்தப் பிரிவில்,–

(அ) "நடவடிக்கை" என்பது, உரிமைவழக்கு, வழக்கு அல்லது மேல்முறையீடு எதனையும் உள்ளடக்கும்; மற்றும்

(ஆ) தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ ஒன்றியத்து ஆட்சிநிலவரையில் உள்ள "நேரிணையான நீதிமன்றம், தீர்ப்பாயம், அதிகாரஅமைப்பு அல்லது அலுவலர்" என்பது–

(i) குறித்திட்ட நாளுக்குப் பின்பு நடவடிக்கை தொடரப்பட்டிருக்குமானால், எந்த நீதிமன்றத்தில், தீர்ப்பாயத்தில், அதிகாரஅமைப்பில் அல்லது அலுவலர் எவர் முன்பு நடவடிக்கை முன்னிடப்பட்டிருக்கக் கூடுமோ அந்த நீதிமன்றம், தீர்ப்பாயம், அதிகாரஅமைப்பு அல்லது அலுவலர் என்று; அல்லது

(*ii*) in case of doubt, such court, tribunal, authority or officer in that Union territory as may be determined after the appointed day by the Administrator of the Union territory of Dadra and Nagar Haveli and Daman and Diu, or before the appointed day by the existing Union territories, to be the corresponding court, tribunal, authority or officer.

***Explanation.*—**For the purposes of this sub-section, "Administrator" means the administrator appointed by the President under article 239 of the Constitution.

Effect of provisions inconsistent with other laws.

22. The provisions of this Act shall have effect notwithstanding anything inconsistent therewith contained in any other law for the time being in force.

Power to remove difficulties.

23. (1) If any difficulty arises in giving effect to the provisions of this Act, the President may, by order published in the Official Gazette, make such provisions, not inconsistent with the provisions of this Act, as appear to it to be necessary or expedient for removing the difficulty:

Provided that no such order shall be made after the expiry of three years from the appointed day.

(2) Every order made under this section shall be laid before each House of Parliament.

(ii) ஐயப்பாடான நேர்வுகளில், குறித்திட்ட நாளுக்குப் பின்பு தாத்ரா–நாகர் ஹவேலி மற்றும் தமண்–டையூ நிலவுறும் ஒன்றியத்து ஆட்சிநிலவரையின் ஆளுகையராலோ அல்லது குறித்திட்ட நாளுக்கு முன்பு, இருந்துவரும் ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளாலோ, நேரிணையான நீதிமன்றம், தீர்ப்பாயம், அதிகாரஅமைப்பு அல்லது அலுவலர் எனத் தீர்மானிக்கலாகும் அத்தகைய நீதிமன்றம், தீர்ப்பாயம், அதிகாரஅமைப்பு அல்லது அலுவலர் என்று பொருள்படும்.

**விளக்கம்:** இந்த உட்பிரிவி நோக்கங்களுக்காக, "ஆளுகையர்" என்பது, அரசமைப்பின் 239 ஆம் உறுப்பின்படி குடியரசுத் தலைவரால் அமர்த்தப்பெறும் ஆளுகையர் என்று பொருள்படும்.

பிற சட்டங்களுடன் முரண்படும் வகையங்களின் செல்திறம்.

22. இந்தச் சட்டத்தின் வகையங்கள் அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அதனுடன் முரணாக அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் செல்திறம் பெறும்.

இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம்.

23. (1) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்குச் செல்திறம் கொடுப்பதில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், குடியரசுத்தலைவர், அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படும் ஆணையின்வழி, இடர்ப்பாட்டினை அகற்றுவதற்குத் தேவையென அல்லது உகந்ததென அவருக்குத் தோன்றலாகிறவாறு இந்தச் சட்டத்தின் வகையங்களுடன் முரணாக இல்லாத அத்தகைய வகையங்களைச் செய்யலாம்:

**வரம்புரையாக:** அத்தகைய ஆணை எதுவும், குறித்திட்ட நாளிலிருந்து மூன்றாண்டு கழிவுற்ற பின்பு பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(2) இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்படும் ஆணை ஒவ்வொன்றும், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.